கிராம ஊராட்சிகளில் உள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு – மின்விளக்குகளை பராமரிப்பதற்காக, தமிழ்நாடு மின்சார வாரிய மின்பாதையாளர்களுக்கு (Linemen) வழங்கப்படும் உழைப்பூதியத்தை (Remuneration) உயர்த்துதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.3) துறை

அரசாணை (நிலை) எண். 55 நாள்: 1.4.2008

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (D) எண்.80, ஊ.வ.(பிII) துறை, நாள் 3.4.1992.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ், சென்னை–15, கடித எண்.65125/07/பரா.1, நாள் 19.10.07.

ஆணை

இரண்டாவது மாநில நிதிக்குழு ஆலோசனைப்படி, தமிழ்நாடு மின்சார வாரியம் பரிசீலித்து, பரிந்துரைந்த கட்டணம் 15 மடங்கு அதிகமாக இருப்பதால், கிராம ஊராட்சிகளுக்கு அதிக நிதி சுமை ஏற்படும் என்பதாலும், இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மின்பாதையாளர்களுக்கு 10 மடங்கு உழைப்பூதியத்தினை நிர்ணயிக்கலாம் என்றும் இதனால் ஏற்படும் செலவினத்தை கிராம ஊராட்சி நிதிக் கணக்கு எண்.1 ல் செலவழிக்க அனுமதிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

| வ. எண். | விவரம் | தற்போது உள்ள கட்டணம் ரூ. | உயர்த்த உத்தேசிக்கப்பட்ட கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1. | இன்கேன்டசென்ட் வகையான விளக்கு (Incandescent bulb) மாற்றுவதற்கு | 0.50 | 5.00 |
| 2. | குழல் விளக்கு, சோடியம் வேப்பர் விளக்கு, சோக்குகள், ஸ்டாட்டர்கள் மற்றும் கன்டன்சர்கள் மாற்றுவதற்கு | 2.00 | 20.00 |

2. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன்படி கிராம ஊராட்சிகளில் மின்விளக்குகள் மற்றும் இதரபாகங்களை மாற்றுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரிய மின்பாதையாளர்களுக்கு (Linemen) வழங்கப்படும் உழைப்பூதியத்தினை (Remuneration) கீழ்கண்டவாறு உயர்த்தி நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

1. இன்கேன்டசென்ட் வகையான விளக்கு மாற்றுவதற்கு ரூ.5/–
   (For changing incandescent bulb) (ரூபாய் ஐந்து மட்டும்)
2. குழல்விளக்கு மற்றும் சோடியம் வேப்பர் விளக்கு மாற்றுவதற்கு ரூ.20/–
   (For changing Tubelights, Sodium Vapour Lamps) (ரூபாய் இருபது மட்டும்)
3. சோக்குகள், ஸ்டாட்டர்கள் மற்றும் கன்டன்சர்கள் மாற்றுவதற்கு ரூ.10/–
   (For changing Chokes, Starters and Condensers) (ரூபாய் பத்து மட்டும்)

இதனால் ஏற்படும் செலவினம் கிராம ஊராட்சி நிதிக் கணக்கு எண். 1 லிருந்து செலவு செய்ய அனுமதி வழங்கப்படுகின்றது. உயர்த்தப்பட்ட இந்த உழைப்பூதியம், இந்த ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

3. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு.715/FS/P/08 நாள் 3.3.08 இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்